09.12.2019 **O.S.No.58 /2016**

*பிசா 2 சுபாஷ்*

*(சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)*

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு பற்றி எனக்கு முழுமையாக தெரியும். 1ம் பிரதிவாதி எனது மாமியார் ஆவார். 2ம் பிரதிவாதி எனது மனைவி. 4ம் பிரதிவாதி எனது மகள். 5ம் பிரதிவாதி எனது பேரன் ஆவார். இந்த வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் மாமனார் சீனிவாசனுக்கு கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் ஆகும். 1வது இலக்க சொத்து வயல்பட்டியில் உள்ள பூர்வீக வீடு ஆகும். அந்த வீட்டில் பாதி வீட்டை சீனிவாசன் அவருடைய சகோதரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். 2வது இலக்க சொத்து முத்துதேவன் பட்டியில் உள்ள தோட்டம் ஆகும். அந்த தோட்டம் சீனிவாசனுக்கு பாகப்பிரிவினை பத்திரம் மூலம் கிடைத்தது என்றால் சரிதான். 3வது இலக்க சொத்து கேரளாவில் உள்ள எஸ்டேட். அந்த எஸ்டேட் சீனிவாசனுக்கு பாகப்பிரிவினை பத்திரம்மூலம் கிடைத்தது என்றால் சரிதான். 4வது இலக்க சொத்து தேனி சுப்பன் தெருவில் உள்ள 15 செண்ட் இடம் என்றால் சரிதான். அந்த சொத்தில் பாதி இடம் வாதியின் கணவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 15 செண்ட் இடத்தின் ஒரு பகுதியை 3வது நபர் ஆக்கிரமிப்பு செய்தது சம்பந்தமாக வாதியின் கணவர் வழக்கு தாக்கல் செய்து 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கின் எண் ஒஎஸ் 27/2015 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 5வது இலக்க சொத்து வாசவி காலனியில் உள்ள வீடு, அந்த வீட்டு இடம் சீனிவாசன் வாதியிடமிருந்து தானசெட்டில்மெண்ட் மூலம் பெற்ற காலியிடம் என்றால் சரிதான். அந்த வீட்டின் பாதை சம்பந்தமாக 4 மற்றும் 5 பிரதிவாதிகள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கின் எண் ஒ.எஸ்.எண்164/2014 என்ற எண்ணில் நிலுவையீல் உள்ளது என்றால் சரிதான். இந்த சொத்து தவிர என் மாமனார் சீனிவாசனுக்கு

உப்புக்கோட்டையில் ஒருவயலும், தேனி பெரியகுளம் ரோட்டில் ஒரு வீடும் இருந்து அதை விற்றுவிட்டார் என்றால் சரிதான். 10.10.2012ம் தேதி 1, 2 மற்றும் 3 இலக்க சொத்துக்களை சீனிவாசன் தன் பேரனான 5ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அவர் தன்னுடைய பாகத்தை எழுதி வைத்துள்ளார். சீனிவாசன் 14.10.2012ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 24.10.2014ம் தேதியன்று ராமநிவாஸ் 4வது இலக்க சொத்தை தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றால் வழக்கு சொத்து விபரத்தில் உள்ள 2வது இலக்க சொத்தின் பாதியை எழுதிவைத்துள்ளார். 1.12.2014ம் தேதியன்று ராமநிவாஸ் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 5வது இலக்க சொத்தான வீடு மத்திய கலால் அலுவலகத்திற்கு வாடகைக்கு விட்டிருந்தார்கள் என்றால் சரிதான். அதன் மாத வாடனை ரூ.12,000/- என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையில் உள்ள அணைத்து பிரச்சினைகளும் சீனிவாசன் இறந்த பின்பு தான் வந்தது என்றால் சரிதான். என் நிருபண வாக்குமூலத்தில் வாதி மற்றும் வாதியின் கணவரும் சேர்ந்து சீனிவாசனுக்கு மன உளைச்சல் கொடுத்ததால் தான் அவர் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டார் என்று சொலலியுள்ளேன் என்றால் சரிதான். நான் ராமநிவாஸ் தற்கொலை சம்பந்தமாக ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. 5வதுஇலக்க சொத்தில் வாதி மற்றும் வாதியின் கணவர் இடைஞ்சல் செய்ததாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்,அது சம்பந்தமாக காவல்நிலையத்தில் கொடுத்த புகாருக்கு ஆதராரம் ஏதேனும் நீதிமன்றத்தில்தாக்கல் செய்துள்ளேனா என்றால்இல்லை. வாதியும் அவரது வாதியின் கணவரும் எனது மாமனார் சீனிவாசனும் கூட்டாக ரியல்எஸ்டேட் செய்தததற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஒஎஸ் 164/2014, ஒஎஸ் 27/2014 வழக்குகளுக்கும் இந்த வழக்கின் தன்மைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

10.11.2012 ம் தேதியன்று சீனிவாசன் 5ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த உயில் தாவா சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதால்அந்த உயில் இந்த வழக்கை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 24.10.2014ம் தேதியன்று ராமநிவாஸ் தன் மனைவி 4ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் ஆவணம் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் சம்பந்தமாக எழுதி வைக்கப்பட்டிருப்பதால் அது செல்லாது என்றால் சரியல்ல. நான் தான் மூளையாக இருந்துவாதி மற்றும் வாதியின் கணவரிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக அணைத்து நடவடிக்ககளிலும் ஈடுபட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதால் வாதிக்கு பத்தில் 2 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் என் மகள் மற்றும் பேரனுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-A.அப்துல் காதர்,<br>
கூடுதல் மாவட்ட விரைவு நீதிபதி,<br>
**தேனி.**